# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 30 April 2017 Issue - 4


ஆசிரியர் உரை

# குளிர்காய்ந்து கொண்டிருந்தான்

**பொ**துவாகப் பருவநிலையை அதன் தன்மைக்கேற்ற வகையில் நான்கு வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகளில் ஒன்று குளிரைக் கொண்டு வரும் மழை காலம் இந்தக் குளிர்காலம், பூமியில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும், அவை அமைந்திருக்கும் தட்பவெப்ப சூழ் நிலைக்குத் தகுந்தவாறு ஏற்படும். சிலநாடுகளில் பல மாதங்களுக்கும், வேறு பல நாடுகளில் சில மாதங்களுக்கும் இந்தக் குளிர்காலம் நீடிக்கும். இக்காலத்தில் ஆங்காங்கே வாழும் மனிதன், குளிரின் பாதிப்பிலிருந்து தன் சரீரத்தை இதமாக்கிக்கொள்ள, அவன் வாழ நேர்ந்த பகுதிக்கேற்றவாறு பல வகையான உத்திகளை மேற்கொண்டு வந்திருக்கிறான். இப்படி மனிதனால் மேற்கொள்ளப்படும் முறைகளில் மிகவும் பழமையானதாக இருந்து, இன் றளவும் தொடர்கின்ற ஒரு வழக்கம், நெருப்புண்டாக்கிக் குளிர்காய்வது. ஒரு வேளை விஞ்ஞான யுகத்தின் அசுர வளர்ச்சி விண்ணை முட்டிவிட்டதென்று நாம் பெருமையடித்துக்கொண்டாலும், இப்பழைய முறை வழக்கத் திலிருந்து இன்னும் ஒழிந்து போகவில்லை. இன்றளவும், குளிர் காலங்களில் இம்முறையை நம்முடைய கிராமங்களிலும், ஏன் நகரங் களிலும் கூடக் காணமுடியும்.

ஒருவன் குளிரின் பாதிப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள நெருப்புண்டாக்கிக் குளிர்காய்வது எந்த வகையிலும் தவறானதல்ல, குளிர்காயும் ஒருவனை யாரும் பெரிதாகக் குறை சொல்லமாட்டார்கள். உண்மையில், தன் சரீரத்தைப் பாதுகாத்துக் கொள்ள ஒருவன் செய்யும்

முயற்சியைக் குறை சொல்வது நியாயமுமல்ல. இருப்பினும், புதிய ஏற்பாட்டிலுள்ள மத்தேயு தவிர ஏனைய நற்செய்தி நூல்களை நாம் கவனமாக வாசிக்கையில் **பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான்** என்ற பகுதிக்கு நாம் வரும்போது, நம்மையும் அறியாமல் நமக்குள்ளாக லேசாக உதைக்கும். அதுவும், யோவான் நற்செய்தி நுலில், ஒரு ஏழு வசன இடைவெளியில், பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்று **இரண்டு முறை** வரும்போது பரிசுத்த ஆவியானவர் ஏன் இக்காரியத்தை இப்படிச் சொல்லுகிறார் என்ற கேள்வியையும் நமக்குள்ளாக எழுப்பும். அவன், அச்சமயத்தில் குளிர்காய்ந்து கொண்டிருந்தது நியாயமானதாக இருந்திருந்தால், வேதாகமம் இப்படிப் பேசத் தேவையில்லையே என்றும் எண்ணவும் தோன்றும். வேதவசனம் ஒன்றையும் ஒருபோதும் தவறாகவோ அல்லது மிகைப்படுத்தியோ சொல்லாததலால், இப்படிச் சொல்லியிருப்பதற்கு ஏதாவது ஒரு சிறப்புக் காரணம் இருக்குமோ என்று நமது சிந்தனையைக் கிளறிவிடும். அப்படித்தானே!

இப்படி சிந்தித்ததின் விளைவுதான் இம்மாதத்திற்கான தலைப்பு. பேதுரு குளிர்காய்ந்த நெருப்பண்டை நாம் போகும்போது, நமக்குப் பயன்படும் சில பாடங்கள் கிடைக்கும் போல்தான் தெரிகிறது. ஆகவே, **நாம் கிட்டப்போய் நம்மைச் சுட்டுக் கொள்ளாமல்** சில பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போமா?

அதற்கு முன்பாக, நமது வழக்கத்தின்படியாக, இச்சம்பவத்திற்கான பின்னணி பற்றிக் கொஞ்சம் பார்த்துவிடுவோம்.

பேதுரு குளிர் காய்ந்து கொண்டிருந்த சம்பவம், இயேசுவின் ஊழியம் விமரிசையாக நடந்த நாட்களில் நிகழ்ந்த ஒரு சம்பவம் அல்ல. மாறாக, அவருடைய பூமிக்குண்டான ஊழிய நாட்கள் நிறைவேறும் நேரம் நெருங்கி, வேதவாக்கியங்கள் அவரைப்பற்றி முன்னுரைத்த காரியங்கள் நிறைவேறும் வேளை வந்தபோது நடந்த ஒன்று. ஆம், அதற்கு சற்று முன்பாக, நம்முடைய ஆண்டவர், தான் தெரிந்த கொண்ட சீடர்களோடு கெதரோன் ஆற்றுக்கு அப்புறமுள்ள கெத்சமனே தோட்டம் சென்றார் (யோவான் 18 : 1). அப்பொழுது அவரை, ஒரு திருடனைப் பிடிப்பது போல பிடிக்க வந்த போர்ச்சேவகர்களோடும் மற்றும் பிரதான ஆசாரியர், பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியர்களோடும் பதுங்கிப் பதுங்கி வந்த கயவன் யூதாஸ், எந்தவொரு பந்தபாசத்திற்கும் அப்பாற்பட்டதொரு முத்தத் தால் இயேசுவைக் காட்டிக் கொடுத்தான் (யோவா 18 : 3, மத் . 26 : 49). இப்படிப் பட்ட ஒரு முத்தம் உலக வரலாற்றில் ஒருபோதும் இடப்பட்டதில்லை. இனி இடப்படப் போவதுமில்லை!

சரி, அங்கே, ஒரு சுவாரசியமான உரையாடலுக்குப் பிறகும், ஓர் எக்கச்

சக்கமான சூழ்நிலைக்குப் பிறகும் இயேசு பிடிக்கப்பட்டு ( 18 : 3 - 10 ) கட்டப்பட்ட நிலையில், யூதமார்க்கத்தின்படியான முதல் விசாரணைக்காக, அவ்வருடத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் மாமனான அன்னா வுக்கு முன்பாகக் கொண்டு போகப்பட்டார். (18 : 12 -23). பிறகு, அந்தக் கட்டு அவிழ்க்கப்படாத நிலையில், இரண்டாவது விசாரணைக்காகக் காய் பாவுக்கு முன்பாக கொண்டு போகப்பட்டார் ( 24 - 27 ). அதன்பிறகு, ஆட்சியும், அதிகாரமும் கையிலிருந்தும், கையாலாகாத மனிதனாகக் காணப்பட்ட பிலாத்துவுக்கு முன்பாக, ரோமச்சட்டத்தின்படி விசாரிக்கப்படு வதற்கு இரண்டு முறை கொண்டு போகப்பட்டார் (18 : 28 - 38, 39 - 40). அப்படிக் கட்டப்பட்ட நிலையில், அதாவது, யூதச்சட்டப்படி விசாரிக்கப் படுவதற்காகக் கொண்டு போகப்பட்டார் அல்லவா அப்பொழுது தான் நடந்துள்ளது (18 : 18, 25) நம்ம ஆள் குளிர்காய்ந்த சம்பவம்.

நான் ஏற்கனவே சொன்னது போல குளிர்காய்வது ஒன்றும் தவறல்ல. ஆனால், இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்டு, சிறப்பாகப் போதிக்கப்பட்டு, அவருடைய சீடர்களில் துடுக்கானவர் என்று அங்கீகாரம் பெற்ற இந்த பேதுரு, எந்தச் சூழ்நிலையில் குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதே மிகவும் கவனிக்கத்தக்கது. ஆம், இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டு நியாயம் என்ற பெயரில் அவர் அநியாயமாய் விசாரிக்கப்பட்ட போது, அரண்மனைக்குள்ளே காரியங்கள் காரசாரமாக நடந்து கொண்டிருக்கும் போது, தான் என்ன செய்கிறோம் என்பது தெரியாமல், தான் என்ன செய்ய வேண்டும்மென்பதும் புரியாமல், குளிர்காய்ந்து கொண்டிருந்துள்ளான். அப்பொழுது பேதுரு, இயேசுவைக் குற்றம் சாட்டினவர்கள் பக்கமாகவும் நிற்கவில்லை, முற்றிலும் இயேசுவுக்கு ஆதரவான நிலை எடுத்து அவருக்குப் பக்கபலமாகவும் இருக்கவில்லை என்றே தெரிகிறது.

ஒரு முக்கியமான கட்டத்தில், எந்த முடிவும் எடுக்கத் திராணி யற்றவனாய் காணப்பட்டுக் **குளிர்காய்ந்து கொண்டிருக்கும்படியாகவா இயேசு இவனைக் கலிலேயாக் கடலோரத்தில் அழைத்தார்?** (மத் 4 : 18) செயல்பட வேண்டிய நேரத்தில் செயல்படாமல், குளிர் காய்ந்து கொண்டிருக் கும்படியாகவா, **உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்** (மத் 4 : 19 ) என்று சொன்னார். தான் யாரென்பதை சாதுரியமாக மறைத்துக்கொண்டு, கண்டுபிடிக்கப்பட்ட நிலையிலும் பொய்யைக் கூசாமல் ஊதி, குளிர்காய்ந்து கொண்டிருக்கும்படியாகவா, **யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ பாக்கியவான்** (மத் 16 : 17) என்று ஆசீர்வதித்தார். சோதனையான நேரத்தில், பிதுபிது என்று முழித்து, வெட்கமில்லாமல் வேடமணிந்து குளிர்காயும்படியாகவா **மூன்று ஆண்டுகள் பயிற்சி தந்தார்? சொல்லுங்கள். நிச்சயமாக இல்லை, இல்லவே இல்லை.**

ஆயினும், இந்தத் துடுக்கு ஆசாமி, இயேசு விசாரிக்கப்பட்டபோது தன்

பொறுப்பைத் தட்டிக் கழித்தவனாக நிர்க்கதியாய்க் காட்சிதந்து, இவன் செயலைப் பரிசுத்த ஆவியானவர், ஒரு ஏழு வசன இடைவெளியில், **இரண்டு முறை** நாசூக்காகக் குத்திக்காட்டும்படி நடந்து கொண்டான். இவன் அங்கே செய்தது நியாயமாக இருந்திருக்குமானால், கண்டிப்பாக சத்திய ஆவியானவர் இப்படிக் கோடிட்டுக் காட்டியிருக்கமாட்டார் என்று நம்பும் படியாகத்தானே உள்ளது. அப்படித்தானே! ஆகவே, பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது பார்த்துப் பயனடைவோம்.

## I முடிவெடுக்க முடியாத இடத்தில் நின்றான்

பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், அவன் முடிவெடுக்க முடியாத ஓர் இடத்தில் நின்றான் என்பது.

முடிவெடுக்க முடியாததைக் காட்டிலும் ஒரு பெலவீனமான நிலை மனிதனுக்கு வேறெதுவும் கிடையாதென்று உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அவர்கள் கூறுவது ஒருபுறம் இருக்கட்டும். இதைப்படிக்கும் போது, நமக்கே, ஏன் இந்தப் பேதுரு இப்படிச் செயல்பட்டான் என்று தானே எண்ணத் தூண்டுகிறது. அதுவும், தன்னால் நேசிக்கப்பட்ட ஒருவர் எக்கச்சக்கமான சூழ்நிலையில் இருக்கும்போது, அவருக்கு அடுத்து என்ன நடக்குமோ என்பது இவனைப் பொறுத்தளவில் மர்மமாக இருக்கும் போது எப்படி இதுபோல் இருக்க முடிந்தது? அதுவும், இவன் குருவாகிய இயேசு, **என்னோடிராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான் என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்** (மத். 12 : 30) என்று உபதேசித்திருப்பதைக் கிட்ட இருந்து கேட்டிருந்தும் எப்படி இப்படியிருக்க முடிந்தது?

பரலோகத்தின் தேவன், அவரை நேசிக்கின்ற பிள்ளைகள் முடிவெடுக்கும் திராணி உள்ளவர்களாகவும், செயல்பட வேண்டிய நேரத்தில் செயல் படுகிறவர்களாகவும் இருக்க வேண்டுமென்றே விரும்புகிறார். தலைமைத் துவப் பண்பில், மோசேயைக் காட்டிலும் சிறந்தவனென்று தேவதாசர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் யோசுவா, ஒரு கட்டத்தில் முடிவெடுக்க வேண்டிய நேரம் வந்தபோது முடிவு எடுங்கள் என இஸ்ரவேலர்களை நெருக்கினான் ( யோசு. 24 : 15 ). இன்னும், பழைய ஏற்பாட்டின் சீரிய கதாபாத்திரமான மோசே, முடிவெடுக்க வேண்டிய நேரம் வந்தபோது சரியான முடிவெடுத்து செயல்பட்டதை பரிசுத்த ஆவியானவர் எபிரெயர் ஆசிரியரைக் கொண்டு சொல்லும்போது, **விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனான போது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும்**

**தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டான்** (எபி. 11 : 24 , 25) என்று மெச்சியிருக்கிறார்.

அன்பானவர்களே, நாம் ஒவ்வொருவரும் மோசே போல, யோசுவா போல, இன்னும் அப்போஸ்தலன் பவுல் போல செயல்பட வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறாரேயொழிய, மற்றபடி, நம்ம பேதுரு இங்கே செயல் பட்டது போலல்ல. தங்களுடைய வாழ்க்கையில் முடிவெடுக்க வேண்டிய நேரத்தில் முடிவெடுக்க முடியாமல் இழந்து போனவர்கள் நிறையப்பேர் உண்டு. அவர்களின் ஈன வரிசையில் நாம் யாரும் சேர்ந்து விடக்கூடாது.

ஆம், மாற்கு நற்செய்தி நூலில், நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டு ஓடி வந்த வாலிபன், நித்திய ஜீவனா? உலகச் செல்வமா? என்று முடிவெடுக்க முடியாததாலேயே துக்கத்தோடு திரும்பிப் போனான். (மாற் 10 : 17 - 22 ). இயேசுவிடம் வந்து துக்கத்தோடே திரும்பிப்போய், சரித்திரம் படைத்த ஒரே மனிதன் இவனாகத்தான் இருக்க முடியும். இவன் விரும்பிய **நித்திய ஜீவனைப்** பெற்றுக்கொள்ள முடியாமல் போனதற்கான ஒரே காரணம், முடிவு எடுக்க வேண்டிய நேரத்தில் முடிவு எடுக்கும் திராணியற்றவனாய் காட்சி தந்ததே.

இதை வாசிக்கும் அன்பரே, நாம் ஒவ்வொருவரும் எப்படிப் பட்டவர்களாய் உள்ளோம்? தேவனுடைய காரியத்தில், இயேசுவுக்கடுத்த உபதேச காரியங்களில், பரத்துக்கடுத்த வாழ்க்கையில் சரியான முடிவு எடுக்கிறவர்களாக உள்ளோமா? அல்லது எலியா தீர்க்கன் காலத்து மக்கள் போல இரண்டு நினைவுகளால் இன்னும் குந்திக்குந்தி நடந்து கொண் டுள்ளோமா? (2 ராஜா 18 : 21) சிந்திப்போம். நாம் ஒவ்வொருவரும், நீதிக் கும், அநீதிக்கும் இடையில், சத்தியற்கும், அசத்தியத்திற்கும் இடையில், உபதேசத்திற்கும், கள்ள உபதேசத்திற்கும் இடையில், இயேசு வாக் களித்துக் காட்டின ஒன்றான மெய் சபைக்கும் (மத் 16 : 18), மனிதர்களால் கட்டப்பட்ட எண்ணிலடங்காத சபைகளுக்கும் இடையில் எது சரியென்று கண்டு முடிவெடுக்கக் கூடியவர்களாய் இருக்க வேண்டியது அவசியம்.

### II சௌகரியமான இடத்திலே நின்றான்

பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம், அவன் தன்னுடைய சௌகரியத்திற்குத் தோதான இடத்திலே நின்றுள்ளான் என்பது.

**அப்பொழுது, குளிர்காலமாயிருந்தபடியால் ஊழியக்காரரும், சேவ கரும் கரி நெருப்புண்டாக்கி நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடனே பேதுருவும் நின்று குளிர் காய்ந்து கொண்டிருந்தான்.**

(யோவான் 18 : 18) என்று வசனம் கூறுகிறது. இவன் செயலை இங்கே நாம் பார்க்கும்போது, இப்படிச் செய்தது நியாயமா என்ற கேள்வியை எழுப்பு கிறதாகவே உள்ளது. இயேசுவின் சூழ்நிலை குறித்து இவன் கவலைப்பட வேண்டிய அளவு கவலைப்பட்டதாக நமக்குத் தெரியவில்லை. நடப்பது நடக்கட்டும், நாம் நம்ம வேலையைப் பார்ப்போம் என்ற எண்ண ஓட்டம் இருந்துள்ளதாகவே தெரிகிறது.

ஆனால், பழைய ஏற்பாட்டு மொர்தெகாயைப் பாருங்கள் இயேசுவின் தியாகத்தையும், அவரின் செயல்பாட்டையும் சற்றேனும் அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறாதவன். ஆயினும், யூத ஜனத்துக்கு எதிராக ஆணை பிறப்பிக்கப்பட்டதென்று அறிந்த போது, **தன் வஸ்திரங்களைக் கிழித்து இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக்கொண்டு, நகரத்தின் நடுவே புறப் பட்டுப் போய், துயரமுள்ள மகாசத்தத்துடனே அலறிக்கொண்டு, ராஜாவின் அரமனை வாசல் முகப்பு மட்டும் வந்துள்ளான்** (எஸ் 4 : 1). இத்தனைக்கும் எஸ்தர் ராஜாத்தியாயிருந்தபடியால், இவனுக்குத் தனிப்பட்ட முறையில் ஆணையினால் ஆபத்து வந்திருக்காது. இருப்பினும் தன்னோடிருப் பவர்களுக்காக இவன் அலறித் துடித்துள்ளான். இவன் இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக்கொண்ட கோலத்தையும், பேதுரு வேலைக்காரர்களின் கூட்டத்தில் நின்று குளிர்காய்ந்ததையும் ஒப்பிட்டுப் பார்த்தால் குலை யெல்லாம் நடுங்குகிறது. பேதுரு அங்கே தவறு செய்திருக்கிறான் என்பது தெளிவாகவே தெரிகிறது.

அன்பானவர்களே, இயேசுவின் உண்மைச் சீடனாய் ஒருவன் இருக்க விரும்பினால், அவருக்காகப் பாடுகளை ஏற்றுக்கொள்ளுகிறவர்களாக இருக்க வேண்டுமேயொழிய, அவர் பெயரைச் சொல்லிக்கொண்டு சுகம் தேடுகிறவர்களாக இருக்கக்கூடாது. ஆனால், இன்றைய மார்க்க உலகில் யதார்த்த நிலை வேதனை தருவதாக உள்ளது. அப்போஸ்தலன் பவுல் தான் பெற்றெடுத்த விசுவாசக் குமாரனுக்கு எழுதும்போது, **அவரோடே கூடப் பாடுகளைச் சகித்தோமானல், அவரோடகூட ஆளுகையும் செய்வோம்** (2 தீமோ 2 : 12) என்றே கூறுகிறார். அவர் நாமத்தினிமித்தம் பாடுபடுகிறவர் களுக்கே நித்திய ஜீவன் என்று அவர் அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக் கிறார் ( மத் 19 : 29 ). ஆனால், நாமோ போகிறபோக்கில் எனக்கு நித்திய ஜீவன் வேண்டுமென்று அடம்பிடிக்கிறோம். இது எப்படிச் சாத்தியமாகும்?

அன்பான வாசகரே, நம்முடைய வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? கிறிஸ்துவினிமித்தம் நாம் சவால்களை ஏற்றுக்கொள்ளவும், அவருக்காகப் பாடுபடவும் ஆயத்தமாக உள்ளோமா? அல்லது என்னுடைய சுகம், என் குடும்பத்தின் நலன், அல்லது நான்

போகும் சபையின் முக்கியத்துவம் தான் பெரிது என்று எண்ணி, நம்மை மையமாக வைத்து வாழ்ந்து, வாழ்க்கையை வீணடிக்கப் போகிறோமா? சொல்லுங்கள். என் சுகம் தான் பெரிது என்று எண்ணி இந்தச் சரீரத்தை நாம் எப்படித்தான் போர்த்து வளர்த்தாலும், இதன் ஆயுள் **70** என்றும் பெலத்தின் மிகுதியால் **80** என்றும் வசனம் கூறுகிறது (சங். 90 : 10). இந்த உலக வாழ்க்கை யாருக்கும் சதமல்ல.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும், நம்ம பேதுரு போல், என் சுகம் பெரிதென்று எண்ணி வாழாமல், அப்போஸ்தலன் பவுல் போல், **கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்** என்று சொல்லி ( பிலி. 1 : 21 ) கிறிஸ்துவுக்காகவும், அவர் கட்டின ஒன்றான மெய் சபைக்காகவும் (எபே. 4 : 4 ), கிறிஸ்துவின் உபதேசத்துக்காகவும் ( 2 யோவா 9 ) வாழ்வோம். இறுதியில் நித்திய ஜீவனைப் பெறுவோம்.

### III ஆபத்தான இடத்திலே நின்றான்

பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருந்தான் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் மூன்றாவது பாடம், ஆபத்தை வரவழைக்கக் கூடிய இடத்திலே அவன் நின்றான் என்பது.

அப்போஸ்தலன் பேதுருவைப் பற்றி நாம் உயர்வாகப் பேசுவதற்கு பரிசுத்த வேதாகமத்தில் ஏராளமான காரணங்கள் உண்டு. தேவனால் வெகுவாகப் பயன்படுத்தப்பட்ட மிகச் சிலரில் இவனும் ஒருவன். யாருக்கும் இதிலே மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆயினும், இவன் இயேசுவை மறுதலித்த சம்பவம் இவனது நெடிய ஆன்மீகப் பயணத்தில் ஒரு சறுக்குப் பாதையே. இவனைப் பற்றிப் பேசிப் பெருமைப்படுவதற்கு நிறைய இருந்தும், இச்சம்பவம் ஓர் அழகிய வெள்ளைச் சட்டையில் கறுப்புப் புள்ளி போன்ற ஒன்றாகவே உள்ளது.

சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று பேதுருவிடம் சொன்ன போது, **ஆண்டவரே, காவலிலும், சாவிலும் உம்மைப் பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறேன்** என்று கூறி அவன் தம்பட்டம் அடித்தான். இயேசு சொன்னது கண்டிப்பாக நிறைவேறியே ஆக வேண்டும். அதில் சந்தேகமில்லை. ஆயினும், இவன், **மூடன் நெடுகப் போய் தண்டிக்கப்படுவான்** என்பது போல ( நீதி 22 : 3 ) வலியச் சென்று வம்பிலே மாட்டிக்கொண்டு மறுதலிக்கிறான். நமது தலைப்புக்கான வசனத்தைப் பாருங்கள். **சீமோன் பேதுரு நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தான்: அப்பொழுது சிலர் அவனை நோக்கி; நீயும் அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றார்கள். அவன்; நான் அல்ல என்று மறுதலித்தான்** (யோவான் 18 : 25).

ஒருவன் தன் ஆன்மீக வாழ்வில் ஆபத்து உள்ள இடத்திற்குப் போகாமலும், ஆபத்து வரும்வரை அங்கே தரித்திராமலும் இருப்பது மிகவும் நல்லது. இவ்வரிய பண்பு பக்தன் யோபுவிடம் இருந்ததாக சர்வவல்ல தேவன் சாட்சியிடுகிறார். ஆம், அவர் சாத்தானிடத்தில் பேசின போது, யோபுவைப் பற்றி என்ன கூறுகிறார் என்று தயவு செய்து கவனியுங்கள். அப்பொழுது கர்த்தர் சாத்தானை நோக்கி, **நீ என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமான மனுஷனாகிய அவனைப் போல் பூமியில் ஒருவனுமில்லை; முகாந்தரமில்லாமல் அவனை நிர்மூலமாக்கும்படி நீ என்னை ஏவினபோதிலும், அவன் தன் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறான் என்றார்** ( யோபு 2 : 3 ). இந்த யோபு போல், பொல்லாப்பு வருமென்று தெரியும் காரியங்களுக்குக் கட்டாயம் நம்மை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும். பேதுரு, இயேசுவோடிராமல் குளிர்காயச் சென்றது அவனுக்குப் பிரச்சினையைக் கொண்டு வந்ததென்பது கவனிக்க வேண்டிய ஒன்று.

அப்படியானால் அருமையானவர்களே, நம்முடைய ஆன்மீக வாழ்வில் நாம் எப்படிப்பட்ட இடத்தில் இருக்கிறோம்? நம்முடைய தனிப்பட்ட பக்தி வாழ்வில், தேவனை ஆராதிக்கும் சபை வாழ்வில், தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதால் பெற்றுக்கொள்ளும் இரட்சிப்பின் வாழ்வில், பரலோகத்திற்குப் பாதை காட்டும் அன்றாடக் கிறிஸ்தவ வாழ்வில் நாம் எங்கே இருக்கிறோம்? சொல்லுங்கள்.

பேதுருவுக்கு அவன் நின்ற இடம் சுகத்தைக் கொடுத்தது போல அநேகராகிய நமக்கும், நம்முடைய ஆன்மீக வாழ்வில் நாம் இருக்கும் இடம் பலவிதமான சுகங்களைக் கொடுக்கக் கூடியதாய் இருக்கலாம். ஆராதனைக்குப் போகப் பக்கமாக இருக்கிறதென்ற சுகம், பெரிய கட்டிடம் என்ற சுகம், போதனையில் கண்டிப்பில்லை என்ற சுகம், கூட்டம் நிறைய வருகிறது என்ற சுகம், பாரம்பரியம் என்ற சுகம், பண்டிகைக் கொண்டாட்டம் என்ற சுகம், எனக்குப் பிடித்தமான ஊரறிந்த ஊழியர் என்ற சுகம், எனக்கு மரியாதை கிடைக்கிறது என்ற சுகம், சமுதாய மக்களோடு இருக்கிறோம் என்ற சுகம் என்று இப்படிப் பல சுகங்கள் கிடைக்கலாம்.

ஆனால், சுகம் வேண்டிக் குளிர்காய்ந்து கொண்டிருந்த பேதுருவுக்கு எதிர்பாராத நிலையில் ஆபத்து வந்ததுபோல, நமக்கும், நாம் இயேசுவோடு கொண்டிருக்கும் உறவுக்கும் சடிதியாய் ஆபத்து வரும். ஆகவே, நாம் நிற்கும் இடம் சரியானதா என்று உறுதி செய்து கொள்வது மிகவும் அவசியம்.

நீங்கள் ஒவ்வொருவரும் அப்படி உறுதி செய்து பரம கானானுக்குப் பங்குள்ளவர்களாக மாற பாரத்தோடு வேண்டுகிறோம். ஆமென்! ●

*ஜெபியுங்கள்!* *பங்கு பெறுங்கள்!!*

# இருபதாம் வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## " திருமறை தியானம் " நேயர்கள் &
## " திருமறை ஆசான் " வாசகர்கள் கருத்தரங்கம்

இடம்: **YMCA வளாகம், ஏலகிரிமலை**

**( வேலூர் மாவட்டம் )**

**நாள் : மே மாதம் 1, 2, 3 - 2017 ( திங், செவ், புதன்).**

**சிறப்பம்சங்கள்**

☞ கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறைகளிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.

☞ தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.

☞ ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.

☞ பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.

☞ கோடை வாசஸ்தலம் – சமச்சீரான தட்ப வெட்பம்.

☞ வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.

☞ குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.

☞ பெண்களுக்கு தனி இடவசதி.

☞ சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

**பதிவுக் கட்டணம்**

**பெரியவர்கள் ரூ. 500/ சிறியவர்கள் ரூ. 300/**

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

## கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.

✆. 04257 - 230030, 98427 - 30382, 99655 - 30385

குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு.

ஆகவே கட்டாயம் **M.O.** செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

# ஏன் கிறிஸ்தவம் மிகவும் வித்தியாசமானது?

Bro. J.C. சோட்

சென்ற மாத தொடர்ச்சி...

ஒருவர் கர்த்தருடைய குடும்பத்தில் சரீரப் பிரகாரமாகப் பிறக்க முடியாது. கிறிஸ்தவம் சரீரப் பிரகாரமான பிறப்பினால் வளர்வதில்லை. மாறாக, ஆவிக்குரிய பிறப்பின் மூலமாக வளர்கிறது (யோவான் 3 : 3 – 5). வேறுவிதமாகச் சொன்னால், கர்த்தர் தம்முடைய சீஷர்களை ஜனங்களிடத்தில் தம்மைப்பற்றி போதிக்கவும், அவர்களிடத்தில் காரண காரியங்களோடு அவரைப்பற்றி எடுத்துரைக்கவும், கிறிஸ்துவை விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப்படியவும், அதன் மூலம் அவரால் இரட்சிக்கப் படவும், தேவனுடைய பிள்ளைகளாகும்படி ஜனங்களைச் சம்மதிக்கச் செய்யவும் அனுப்பினார். **விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்** என்று பவுல் நமக்கு நினைப் பூட்டுகிறார் (ரோமர் 10 : 17). எபிரெய எழுத்தாளர், **விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்** என்று சொல்கிறார். மீண்டுமாக எபிரெய எழுத்தாளர், கிறிஸ்துவையும், அவருடையவர்களாகப் போகிறவர்களையும் குறித்து, **அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி** என்று உரைக்கிறார் ( எபிரெயர் 5 : 8, 9 ). அதன் பொருள், குழந்தைகள் அல்லது சிறுபிள்ளைகள் கிறிஸ்தவர்களாக அல்லது சபையின் அங்கத்தினர்களாக முடியாது. அவர்கள் நன்மை, தீமை இன்னதென்று அறிந்துகொள்ளும்படியாகவும், கிறிஸ்துவின் உபதேசங்களை கேட்கும்படியாகவும், கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிவதா, வேண்டாமா என்பதை அவர்களே முடிவெடுக்கத்தக்கதாகவும் வளர வேண்டும்.

கிறிஸ்தவம், கடைசியாக எல்லோரும் உயிரோடு எழுந்திருப்பார்கள் என்றும், எல்லோருக்கும் நியாயத்தீர்ப்பு இருக்குமென்றும், எல்லோரும் தங்கள் நித்தியத்தை பரலோகத்தில் அல்லது நரகத்தில் கழிப்பார்கள் என்றும் போதிக்கிறது. கிறிஸ்து, **இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால், பிரேதக் குழிகளிலுள்ளவர்கள் அனைவரும்**

**அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜிவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்** என்றார் (யோவான் 5: 28, 29). நாம் இதையும் வாசிக் கிறோம், **அன்றியும், ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே** என்று ( எபிரெயர் 9 : 27 ) ல் இன்னுமாக பவுல், ஏனென்றால், **சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லோரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்** என அறிவிக்கிறார் (கொரி. 5 : 10). நியாயத்தீர்ப்பு நடந்தேறிய பிறகு துன்மார்க்கர் நித்திய ஆக்கினையை அடைவார்கள், நீதிமான்கள் நித்திய ஜீவனை அடைவார்கள் (மத்தேயு 25 : 46).

கிறிஸ்தவம் எதிர்க்கின்ற காரியங்களும் உண்டு. கிறிஸ்தவம் சாத் தானை, இந்த உலகத்தை,மாம்சத்தின் கிரியைகளை எதிர்க்கிறது (I யோ. 2 : 15 – 17 ; கலா. 5 : 19 – 21). குறிப்பாக, கிறிஸ்தவம் போர், லஞ்சம், புகை பிடித்தல், சூதாட்டம், மதுபானம் குடித்தல், போதை மருந்துகளைப் பயன் படுத்துதல், கருக்கலைப்பு, ஆண்புணர்ச்சி என்று இன்னும் இப்படிப்பட்ட வைகளுக்கு எதிரானது. கிறிஸ்தவம், ஜாதிமுறை, விக்கிரக ஆராதனை, பொய்யான மதங்கள், மனிதர்களுக்கு முன்பாகத் தங்களைத் தெய்வங் களாக உயர்த்துவது போன்றவைகளை நிராகரிக்கிறது. கிறிஸ்தவம், மறு அவதாரத்தை நம்புவதில்லை. கிறிஸ்தவம், அதன் அங்கத்தினர்கள் மாம் சம் புசிப்பதைத் தடை செய்வதில்லை. சில மக்கள் விவாகம் செய்வதைத் தடை செய்வதையும், மாம்சம் புசிப்பதிலிருந்து விலகியிருக்கும்படி கட்டளை யிடுவதையும் குறித்து பவுல் இப்படியாகச் சொல்கிறார். **விவாகம் பண்ணா திருக்கவும், விசுவாசிகளும், சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத் திரத்தோடே அனுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள். தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில், ஒன்றும் தள்ளப்படதக்கதல்ல. அது தேவ வசனத்தினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்** (I தீமோ. 4 : 2 – 5).

தேவனுடைய வார்த்தையில் சொல்லப்படாத கிறிஸ்தவத்தின் எல்லா கொள்கை, கோட்பாடுகளையும் நாங்கள் எதிர்க்கிறோம். வேறுவிதமாகச் சொன்னால், கிறிஸ்தவம் என்று உலகத்தால் அதிகமாகப் பார்க்கப்படுகிற கிறிஸ்தவம் ஒரு தவறான கிறிஸ்தவமாகும். இதன் காரணமாக,

உண்மையான கிறிஸ்தவத்திற்கு கெட்ட பெயர் வருகிறது. கிறிஸ்தவர்கள் சண்டைபோடுகிறதை நாம் கேட்கிறோம், கிறிஸ்தவர்கள் தவறான, கெட்ட காரியங்களைச் செய்கிறதை நாம் கேள்விப்படுகிறோம். மறுபடியும், இது உண்மையான கிறிஸ்தவத்தை வெளிப்படுத்துகிறதில்லை.வேதாகமத்தின் கிறிஸ்தவம், இவைகளை நடைமுறைப்படுத்துகிறவர்கள் செய்கின்ற நல்ல காரியங்களினால் மட்டும் அறியப்பட்டு இந்த உலகத்தை வாழ்வதற்கு ஏற்ற ஒரு சிறந்த இடமாக மாற்றுகிறது. ஆகவே, தேவனுடைய வார்த்தை மனிதனால் உண்டாக்கப்பட்ட போலி கிறிஸ்தவம் மற்றும் பிரிவினைச் சபைகள் இவைகளுக்கு விரோதமாகப் போதிக்கிறது.

நாங்கள் இந்த உலகத்தின் மதங்களிலோ அல்லது கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்ளுகிற மனிதர்களுடைய பிரிவினைச் சபைகளிலோ நம்பிக்கை கொள்வதில்லை. ஆனால், மார்க்க சுதந்திரத்தில் நம்பிக்கை வைக்கிறோம். தேவன், இந்த உலகத்தின் தவறான மதங்களை அங்கீகரிக்கப்பதில்லை. ஆனால், மெய்யான தேவனை ஆராதிப்பதா அல்லது எதிர்ப்பதா என தீர்மானம் எடுப்பதை ஒவ்வொரு தனி நபரிடமே விட்டு விடுகிறார். தன்னுடைய மதத்தை மற்றவர்கள் மீது திணிக்கும் உரிமை எந்த மனிதனுக்கும் கிடையாது. மனிதன், தான் விரும்புகிறபடி தன் ஆத்தும காரியத்தில் சுதந்திரமாகச் செயல்பட முடியாத நிலையில், அவன் உண்மையாகவே சுதந்திரமாக இருக்கிறான் என்று சொல்ல முடியாது. தேவனுடைய வார்த்தை தான், மனிதனை தேவனுக்கு அறிமுகப்படுத்தி, அவன் தன் பாவங்களிலிருந்து எப்படி விடுதலை பெற முடியும் என்று சொல்கிறபடியால், மெய்யான விடுதலை தேவனுடைய வார்த்தையில் தான் இருக்கிறது (யோவான் 8 : 32).

ஜனங்கள் வாசிக்கவும், படிக்கவும், சுயமாக முடிவு எடுக்கும்படியான வாய்ப்பு இருக்கும் வரை கிறிஸ்தவத்தில் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. கிறிஸ்தவம் தர்க்கரீதியானது, அர்த்தமுள்ளது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். மேலுமாக, கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களையும், விசுவாசியாதவர்களையும் பாருங்கள், கிறிஸ்தவம் அவர்களுக்கு என்ன செய்து கொண்டிருக்கிறது என்று பாருங்கள், கிறிஸ்தவம் அதன் முழு போதனையின்படி கைக்கொள்ளப்படும்போது, ஜனங்களிடத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, ஜனங்களை ஆவிக்குரிய பிரகாரமாக சிறந்த வாழ்க்கை வாழ வழி நடத்துகிறது. கிறிஸ்தவர்கள் இப்பூமியில் தாங்கள் வாழ்வதற்கான அர்த்தமுள்ள காரணங்கள் இருப்பதாலும், மரணத்திற்குப்

பின்னான வாழ்க்கையை எதிர்நோக்கும் எல்லா முகாந்திரமும் இருப்ப தாலும் அவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியுள்ள மக்களாக இருக்கிறார்கள்.

நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளாதவராக இருந்தால், கிறிஸ் தவத்தைக் கவனித்துப் பார்க்கும்படியாக நான் உங்களை ஊக்கப்படுத்து கிறேன். வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டுப் பகுதியில் இது குறித்து வாசியுங்கள். உங்களுக்கு மனமிருந்தால், நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக மாற விரும்புவீர்கள் என்று நான் நம்புகிறேன். மேலும், தேவனையும், தேவனுடைய குமாரனென்று கிறிஸ்துவை விசுவாசிப்பதாலும், உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புவதினாலும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று உங்கள் வாயினால் அறிக்கை பண்ணுவதாலும், உங்கள் பாவ மன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பெறுவதினாலும் நீங்கள் கிறிஸ்தவராக முடியும் (எபிரெயர் 11 : 6 ; யோவான் 14: 1 – 3 ; அப்போஸ்தலர் 2 : 38). இதை நீங்கள் செய்யும் போது, கர்த்தர் உங்களை இரட்சித்து, தம் முடைய சபையில் சேர்த்துக் கொள்வார். அதன் மூலம் நீங்கள் கிறிஸ்தவ ராகவும், கிறிஸ்தவத்தின் ஒரு அங்கமாகவும் இருப்பீர்கள் ( அப். 2 : 47 ; 1 பேதுரு 4 : 16 ). இது மிகவும் சுலபமான ஒன்றாகத் தெரியவில்லையா? இப்படிச் செய்வது மிகவும் சுலபமானதும், எவ்வித சிக்கலுமற்றது. கிறிஸ்துவின் போதனைகளினடிப்படையில் செய்யும்படி உங்களை ஒப்புக் கொடுக்கத் தயவு செய்து தவறி விடாதீர்கள்.

---

## குமாரனாக விவிலியத்தில் விண்ணவர் இயேசு

- இயேசு தச்சனுடைய குமாரன் (மத் 13 : 55).
- இயேசு மனுஷ குமாரன் (மத் 16 : 13).
- இயேசு தேவ குமாரன் (மாற்கு 1 : 1).
- இயேசு தாவீதின் குமாரன் (மத் 22 : 42).
- இயேசு ஆபிரகாமின் குமாரன் (கலா 3 : 16).

பெண்கள் பகுதி

# இயேசுவை நோக்கி

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு வாழ்த்துதலையும், ஸ்தோத்திரங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதமும் உங்களோடு சேர்ந்து பரிசுத்த வேத எழுத்துக்களைப் படித்து தியானிக்க தேவன் கொடுத்த மகா பெரிய இரக்கத்திற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

பொதுவாக பிரச்சனைகளைச் சந்தித்து வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்குப் பல நேரங்களில் என்ன செய்வது? என்ன தீர்வு? யாரிடம் சொல்வது? செல்வது? இப்படிப் போட்டு, மனதைக் குழப்பிக் கொள்வது மட்டும்தான் நமக்குத் தெரியும். சதா இதே குழப்பத் தோடுதான் ஒட்டுமொத்த உலகமே சுழன்று கொண்டுள்ளது.

அன்பான சகோதரிகளே! இப்படி குழம்பிப் போய் வாழ்ந்து கொண்டிருக்கும் நம் ஒவ்வொருவருக்கும் ஈடு இணையில்ல ஒரு பதில் ஏற்கனவே தயார் நிலையில் உள்ளது என்பதை நாம் அறியாமல் இருக்கிறோம். அது ஏதோ ஒரு புனித ஸ்தலமோ, தைலமோ, காணிக்கையோ, எண்ணெயோ, புனிதப் பயணமோ அல்ல. அல்லவே அல்ல. மிக எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதும், ஒரே உண்மையும், ஒரே ஒரு பதிலுமாய் இருப்பது எதுவென்றால் **இயேசுவை நோக்கி** என்ற ஒன்றே ஒன்றுதான்.

சரி, இந்த சொற்கள் இடம் பெற்றுள்ள இடம் புதிய ஏற்பாட்டில் எபிரெயர் புத்தகம். வேத வாக்கியங்களெல்லாம் தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டு எழுதப் பட்டது. இதில் எந்த சந்தேகமும், யாருக்கும், எப்போதும் வேண்டாம். இதில் வேறுபாடுகள் வந்துவிட்டால் நாம் எதற்கும் விடை கண்டுபிடிக்க முடியாமல் குழம்பி, புலம்பியே இவ்வுலகை விட்டுக் கடந்து செல்ல நேரிடும். எனவே, முதலில் நாம் இதை விசுவாசிக்க வேண்டும். வேதத்திலுள்ள 66 புத்தகங்களுக்கும் அதை எழுதிய ஆசிரியர் யார் என்பது தெரியும். ஆனால் இந்த நிருபம் எபிரெய கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டு கொடுக்கப் பட்டது. ஆனால், யாரால் என்று வெளிப்படுத்தப்படவில்லை.

ஆரம்பித்த கிறிஸ்தவ ஓட்டத்தை முடிக்க முடியாமல் பல சந்தேகங்களும், இன்னல்களும், எது சரி, எது தவறு என்று குழம்பிய நிலையில் இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு **ஆகையால் மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்** ( எபிரெயர் 12 : 1) என்கிறார்.

எபிரெயர் 11 ம் அதிகாரம் முழுவதும் விசுவாசத்தில் வீரர்களாக இருந்தவர்களுடைய பெயர்களும், அவர்கள் எந்தெந்த சூழ்நிலையில் விசுவாசத்தைக் காட்டினார்கள் அல்லது அந்த விசுவாசத்தைக் காத்துக்கொள்ளப் போராடினார்கள் என்பதை நாம் வாசிக்க முடியும். நம்பமுடியாத, வியத்தகு காரியங்களை அவர்கள் தங்கள் வாழ்க்கையில் அனுபவித்திருக்கிறார்கள். இதையெல்லாம் எழுதி முடிக்கும் எழுத்தாளர், கடைசி வசனத்தில் அதாவது 11 : 40 ம் வசனத்தில் **அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருக்கிறார்.** என்று வாசிக்கிறோம். அந்த விசேஷித்த நன்மை என்ன? என்பதைத்தான் 12 : 1 விளக்குகிறது. அது **இயேசு என்ற நன்மை.**

சரி, 11 ம் அதிகாரத்தில் அனைத்து விசுவாச வீரர்களையும் பட்டியலிட்டுவிட்டு, நம் கண்முன் நிறுத்திவிட்டு, அவர்களை மேகத்திற்கு ஒப்பிட்டுப் பேசிவிட்டு, அதாவது ஒளிவுமறைவின்றி எல்லோராலும், எப்போதும், எந்நேரமும், எங்கிருந்தும் பார்க்கக்கூடியவர்களாகக் காட்டிவிட்டு, வேறொரு முக்கியமான ஒன்றைப் பற்றிச் சொல்லி முடிக்கிறார். அதுதான் விசேஷித்த நன்மையான நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து.

நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் என்றால் என்ன? ஒவ்வொருவர் வாழ்வும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. இந்த உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மோசேயின் வாழ்க்கை வேறு, ஆபிரகாமின் வாழ்க்கை வேறு, மரியாளின் வாழ்க்கை வேறு, அப். பவுலின் வாழ்க்கை வேறு. அவரவர்களுக்கு தேவன் நியமித்திருந்த வாழ்க்கையில் உண்மையாக இருந்து பாடுகளைச் சகித்து இறுதி வரை விசுவாசத்தைக் காத்துக் கொண்டார்கள். எனவே எனக்கு மட்டும் ஏன் இப்படி? நான் என்ன பாவம் செய்தேன்? தேவன்

என்னை நேசிக்கவில்லையா? என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கக் கூடாது. மாறாக, இயேசுவை நோக்க வேண்டும். எந்த விதமான பாட்டை யார் அனுபவித்திருந்தாலும் அதைப் போல் வேறு யாரவாது இந்த உலகில் அனுபவித்திருக்கிறார்களா? என்றால், ஆம். இயேசு கிறிஸ்து அனுபவித்திருக்கிறார். எனவேதான் இயேசுவை நோக்க வேண்டும்.

இயேசுவை நோக்கிப் பார்ப்பதற்குமுன் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும். பாரமான யாவற்றையும், நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட வேண்டும். நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து **வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்** என்கிறார் (மத் : 11 : 28). அருமையானவர்களே! ஸ்திரீகளாகிய நாம் மார்த்தாளைப் போல பற்பல காரியங்களை இழுத்துப்போட்டு, இளைத்துப் போய் கவலைப்பட்டுக் கலங்குகிறோம். இயேசு மட்டுமே நம் பாரங்களைக் குறைக்க முடியும். இயேசுவின் உபதேசம் என்னவென்று பார்த்து, படித்து அதன்படி செய்ய முயற்சித்தால் நிச்சயமாக சுலபமான வாழ்க்கையை நாம் உணர்ந்து கொள்ள முடியும். இரண்டாவதாக, பாவத்தை தள்ளிவிடுதல். இது மிகவும் கடினமான ஒன்று. ஆதியில் ஏதேன் தோட்டத்தில் பாவத்தில் வீழ்ந்த சம்பவம் இன்றும் நம்மை விட்ட பாடில்லை. மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை இவைகள் மனுக்குலத்தைச் சுற்றி, சுற்றி வந்து கொண்டு தான் இருக்கிறது. இதை ஜெயித்து வெற்றி பெறும்போது தான் நமக்கு நியமத்திருக்கிற ஓட்டத்தில் பெறுமையோட ஓடமுடியும். இயேசுவுக்கும் இந்த மூன்று விதங்களிலும் சோதனை வந்தது. இதற்கு அவர் மயங்கவில்லை, நம்பவில்லை, ஏமாறவில்லை. ஐயோ! இது தேவ சித்தத்திற்கு விரோதமாயிருக்கிறதே, தேவன் தனக்குச் சொன்ன வசனத்தைக் கொண்டே இப்பேர்ப்பட்ட பிசாசுகளை மேற்கொள்ள வேண்டுமென்று வசனத்தைப் பேசியே பிசாசைத் துரத்திவிட்டார். மத் 4 ம் அதிகாரத்தில் நாம் அதைக் காணமுடியும். ஆனால் நாமோ கொஞ்சமும் தயங்காமல் **சூழ்நிலைக் கைதிகளாய் பிசாசின் கடவிகளாய்** மிக சுலபமாக அவனை நம்பி, அவனை தேவன் போல் நினைத்து அவன் பின்னே சென்றால் தெய்வம்போல் ஆகி விடலாம், உன்னத நிலையை எட்டி விடலாம் என்று மயங்கிப்போய் பிசாசின் ஆசையான பொய் வார்த்தைகளுக்கு உடனுக்குடன் கீழ்ப்படிந்து அடிபணிந்து விடுகிறோம். இதுதான் இயேசுவுக்கும், நமக்குமுள்ள

மிகப் பெரிய வேறுபாடு. தேவன் சொன்னதை மீறும்போது பாவம் செய்கிறோம். தேவனுக்கும் நமக்கும் சம்பந்தமில்லாமல் போகிறது. எனவே வெளிச்சம் போய் இருள் நம்மைக் கவ்விக் கொள்ளுகிறது. பிறகு பயம், திகில், இழப்பு எல்லாமே நம்மைத் தேடி வந்து குடிகொண்டுவிடுகிறது.

எனவே தான், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தை விட்டு விடவேண்டுமென்று சொல்லு கிறார். விசுவாசத்தைத் துவக்குகிற வரும், முடிக்கிறவருமாகிய இயேசு என்று வாசிக்கிறோம்.

இயேசுவுக்கு பாடுகள் இருந் தது. விபரீதங்களைச் சகித்தார். ஏன் என்று சொன்னால் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷம். அப்படியென்ன சந்தோஷம்? சிலுவையில் பாடுகள் அவமானங்களை அடைந்து, இரத்தம் சிந்தி மரிப்பதின்மூலம் இம்மனுக்குலத்திற்கு கிடைக்கும் இரட்சிப்பு. இதுதான் அவருக்குச் சந்தோஷம். எனவே தான் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங் களைச் சகித்தார். தன்னுடைய நியமனத்தைப் பொறுமையோடே செய்துமுடித்து வெற்றி பெற்றார். அது, பாடுகள் இரத்தம் சிந்துதல் வழியாகத்தான் என்பதை அறிந்து சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார். எனவேதான் இந்த **இயேசுவை நோக்கி** பொறுமையோடே ஓடக்கடவோம் என்று கூறுகிறார்.

ஆக, அருமையான சகோதரிகளே இயேசு இருக்கும்போது நமக்கென்ன குறை. உலகத்தையும், உறவை யும், பிற உலகம் சார்ந்த வைகளையும் நோக்கினால் நாம் படும் பாடுகளில் நாம் மீண்டு வரவே முடியாது. கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனைத்தான் அவர் சிட்சிக்கிறார். அதுவும் கொஞ்ச காலம் தான். அதைவிட மேலாக, தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக் காகவே நம்மை சிட்சிக்கிறார்.

அன்பான சகோதரிகளே! இயேசுவை மட்டும் நோக்கிப் பார்க்க பழகிக்கொள்வோம். நேராக நாம் இன்றைக்கு இயேசுவை நோக்கிப் பார்க்க முடியாது. பின் எவ்வாறு என்று கேட்கிறீர்களா? வேதாகமம் இயேசுவைப் பற்றியும், அவருடைய போதனைகள் பற்றியும், மனுக்குலம் என்ன செய்யவேண்டுமென்று தெளிவாக எழுதிக் கொடுத் திருக்கிறது. எனவே வசனத் திற்குள் சென்று வசனம் காட்டக் கூடிய, சொல்லியிருக்கிற இயே சுவை நோக்கிப் பார்த்து நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள முயற்சிப்போம். அதற்கு தேவன் உதவி செய்வாராக! ஆமென். ●

வாலிபர் பகுதி

# எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்க

*சகோ. பென்னி மார்ட்மன்*

பிரியமான வாலிப உள்ளங்களுக்கு கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அருமையானவர்களே, இவ்வுலகில் நாம் ஒருவருக்கொருவர் நலம் விசாரிப்பதை வழக்கமாக பழக்கமாக கொண்டிருக்கிறோம். நாம் நம் உறவினர்களையோ, நண்பர்களையோ அல்லது தெரிந்தவர்களையோ நேரில்காணும்போதோ, தொலைபேசியில் தொடர்பு கொள்ளும்போதோ நலம் விசாரிக்கிறோம். அப்படிச் செய்யும்போது பெரும்பாலும் நாம் உடல்நலம் பற்றித்தான் விசாரிகிறோம், மனநலம் பற்றி விசாரிப்பதில்லை. ஒருவர் நோயே இல் லாமல் இருப்பது மட்டும் அவர் ஆரோக்கியமாக இருக்கிறார் என்பதற்கான அடையாளமோ அளவுகோலோ அல்ல. ஒருவருடைய மனநலம் நன்றாக இருக்கும்போது மட்டுமே அவர் முழுமையான அரோக்கியமுள்ள மனிதனாக மாறுகிறார். இன்றைய நாட்களில் பலர் குடும்பச்சூழல், சுற்றுச் சூழல், மாறும் வேலைச்சூழல் காரணமாக மனநலம் பாதிக்கப்பட்டவர்க ளாகக் காணப்படுகின்றார். உடல் நலம் குன்றிவிட்டால் மருந்து மாத்திரைகள் என பல வழிகள் உண்டு. ஆனால், மனநலம் குன்றிவிட்டால் வழி என்ன? தேவன் வழியை வேதாகமத்தில் மாத்திரமே வைத்திருக்கிறார். மனிதனுக்காக எழுதப்பட்ட மிகச்சிறந்த புத்தகம் வேதாகமம் தான். இதை வேதாகமத்தின் வார்த்தைகள் மறுபடியும் நிருபிக்கின்றன. வேதாகமம் மனித இனத்துக்கான வழிகாட்டி புத்தகமாகத் திகழ்கிறது. அதுவும் குறிப்பாக பிலிப்பியர் நிரூபத்தில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களைவிட மனித நலனுக்காக வேத வசனங்கள் வேறெங்கும் இல்லை.

பவுல் இந்நிரூபத்தை தனக்குப் பொருளாதார நன்மைகளை கொடுத் தனுப்பிய பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு நன்றி செலுத்துவதற்காக எழுதினார் ( பிலி. 1 : 45, 4 : 18 ) அந்தச் சபையார் எப்பாப்பிரோதீத்து மூலமாகப் பொருளாதார உதவிகளை சிறையிலிருந்த பவுலுக்குக் கொடுத் தனுப்பினார்கள். ஆனால், எப்பாப்பிரோதீத்து பிலிப்பி பட்டனத்திலிருந்து சபையைப் பற்றிய கூடுதல் தகவல்களையும் கொண்டு வந்தார். அப் பட்டணத்து சபையார் பவுலின் சிறைவாசத்தைக் கேள்விப்பட்டு அதிகமாகக் கவலைப்பட்டார்கள். பவுல் தனக்கு சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபல

மாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று அவர்களுக்குத் தெரியப்படுத்தியதின் மூலமாக அவர்களை ஆறுதல் படுத்தினார். மேலும், அவர்கள் தேவ சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள செய்ய வேண்டிய காரியங்களை, பிலிப்பியர் நான்காம் அதிகாரத்தில் விளக்குகிறார். அதிலிருந்து நாம் மனநலம் பற்றி தேவன் சொல்லியிருக்கிற நான்கு வகையான பயிற்சிகளைக் கற்றுக் கொள்ளலாம்.

### I கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டும்

இது மனரீதியான ஓர் உடற்பயிர்சியாகும். ஒரு கிறிஸ்தவன் மகிழ்ச்சி யாயிருந்து தேவனிடத்தில் எல்லாவிதத்திலும் நன்றியுள்ளவனாயிருக்கப் பல காரணங்கள் உண்டு. நமக்காக கிறிஸ்து செய்த தியாகம் இவ்வுலகில் அதைவிட முக்கிய முடிவை எடுக்க நம்மைத் தூண்டி மகிழ்ச்சி அடையச் செய்யவேண்டும். ஆனால் உலகக் கவலைகளும் மனச்சோர்வுகளும் கிறிஸ்தவர்களாகிய நம்முடைய மகிழ்ச்சியை மங்கச் செய்துவிடுகின்றன. இவ்வுலகில் ஒருவர் சோகத்தின் உச்சகட்டத்துக்குச் செல்லும் போது மனோதத்துவ நிபுணர்கள் அவர் சிரித்து மகிழ்ச்சியாயிருக்கவேண்டும் என்று ஆலோசனைகளை வழங்குகிறார்கள். இந்த ஆலோசனை ஆரம்பத்திலேயே வேதாகமத்தில் தேவனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. மனோதத்துவ நிபுணர்கள் புதிதாகக் கண்டுபிடித்துவிட்டோம் என்று மெச்சிக்கொள்ள ஒன்றுமில்லை.

### II நம் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரியவேண்டும்

சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந் தரிப்பார்கள் என்று மனப்பிரசங்கத்தில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாம் மகிழ்ச்சியாயிருப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார். கோபப்படுவது, எரிச்சலடைவது, போன்ற செயல்கள் உலகத்தாருடைய குணாதிசயங்கள். இவைகள் நம் சரீர உறுப்புகள் பாதிப்படைய காரணமாகின்றன. கோபப்படுவதினால் உடலில் அழுத்தம் அதிகமாகி பல்வேறு நோய்களுக்கு வழிவகுக்கின்றது. கோபத்தில் யோசனையின்றி ஒரு நிமிடத்தில் செய்யும் செயல் ஒரு மனிதனுடைய வாழ்க்கையையே வியர்த்தமாக்கிவிடுகிறது. நாம் எந்த நிலையிலிருந்தாலும் மனரம்மியாக இருக்க கற்றுக்கொள்ளவேண்டும் ( பிலி. 4 : 11 ). நாம் எதற்கும் பதட்டப்படாமல் கோபப்படாமல் சாந்தமாக இருக்கவேண்டுமென்று தான் மனோதத்துவ நிபுணர்களும் ஆலோசனை வழங்கி வருகிறார்கள். இதுவும் அதாவது இந்த ஆலோசனையும் தேவனாலே முன்பே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற ஒன்று தான்.

### III நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் இருக்க வேண்டும்

இது மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் நாம் செய்ய வேண்டிய உடற் பயிற்சியாயிருக்கிறது. கவலை என்பது நம் வாழ்க்கைப் பயணத்தில்

அழையா விருந்தாளியாக வந்து நம்மை நிலைகுலையச் செய்கிறது. இவ்வுலகில் நாம் வாழத் தேவையானவைகள் எவைகள் என்பது நம்மைவிட தேவனுக்குத் தான் நன்றாகத்தெரியும். முதலாவது, நாம் தேவனுடைய ராஜ் யத்தையும் அவருடைய நீதியையும் தேடும்போது தேவைகளை தேவன் சந்திப்பார் என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார் (மத்தேயு 6 : 25 - 34 ). தேவகாரியங்கள் என்று வரும்போது நாம் தேவ வசனங்களைத் தியானிக்கலாம். நோயாளிகளைப்போய் சந்திக்கலாம், தேவையில் உள்ளவர்களுக்கு உதவிச்செய்யலாம். இவ்விதமாக பட்டியல் நீண்டு கொண்டேயிருக்கும். இன்று மனோதத்துவ நிபுணர்கள் மனச்சோர்வு ஏற்படும்போது ஏதாவது ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள் என்று ஆலோசனை வழங்குகிறார்கள். இதுவும் தேவன் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வேதவசனங்களில் வைத்திருக்கிற ஆலோசனைகளைத் தான் எதிரொலிக்கிறது.

## IV நம் பிரச்சனைகள் எல்லாவற்றையும் தேவனிடத்தில் தெரியப்படுத்த வேண்டும்

பிரியமான வாலிபர்களே, நம் வாழ்க்கையில் பிரச்சனைகள் ஏற்படும் போது நம் நண்பர்களிடம் தெரியப்படுத்துகிறோம். உறவினர்களிடம் தெரியப்படுத்துகிறோம். அதனால் தீர்வு உண்டாவதில்லை. அப்படியே தீர்வு உண்டானாலும் அது பக்க விளைவுகளை ஏற்படுத்துகிற தீர்வாகத் தான் இருக்கும். மனோதத்துவரீதியாக நம் கவலைகளை, பிரச்சனைகளை நமக் குள்ளேயே அடக்கிவைக்காமல் பிறரிடம் பகிர்ந்துகொள்வது, தெரியப் படுத்துவது பாரத்தைக் குறைக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், யாரிடம் தெரியப்படுத்திகிறோம் என்பதுதான் முக்கியம். சில வேளைகளில் நம் பிரச்சனைகளை பிறரிடம் தெரியப்படுத்தும் போது அது மற்றுமொரு மிகப் பெரிய பிரச்சனைக்கு வழிவகுத்துவிடுகிறது. எனவே தான், நாம் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங்குறித்து நம் விண்ணப்பங் களை ஸ்தோதிரர்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்தும் போது நல்ல தீர்வு கிடைக்கும் என்கிற நம்பிக்கையில் பாரம் இறங்கிவிடுகிறது.

பிரியமான வாலிப உள்ளங்களே! இன்றைய நாட்களில் மனநலம் என்பது உலகமக்களால் அதிகமாகப் பேசப்படும் விஷயமாக இருக்கிறது. மனநலத்தை மேம்படுத்த மனோதத்துவ நிபுணர்களை நோக்கி ஆட்டுமந்தையைப்போல் படையெடுத்துச் செல்லும் இந்த நாட்களில் மனநலத்திற்காக அதன் மேம்பாட்டிற்காக தேவன் தம்முடைய வல்லமையுள்ள வார்த்தைகளில் வைத்திருக்கிற ஆலோசனைகளை ஏற்று நடந்தால் மனநலமும் மேம்பட்டு நம் ஆத்துமாவுக்குத் தேவையான ஆகாரமும் தங்குதடையின்றி கிடைத்து நம் ஆத்தும வாழ்வது போல் நாம் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்போம் (II யோவான் 2).

சிறுவர் பகுதி

# மேகங்கள் தரும் பாடங்கள்

Bro. ஏபில் நாயகம்

**ஆ**ண்டவராகிய இயேசு கிறிஸ்து வாழ்ந்த தேசமாகிய பாலஸ்தீனா விலே, சீதோஷ்ணநிலை வருட முழுவதும் ஏறக்குறைய ஒரே மாதிரியான தாகத்தான் இருக்கும். இந்த அழகான நாடு, கிழக்கிலே பாலைவனத் தையும், மேற்கிலே மத்திய தரைக்கடலையும் எல்லைகளாகக் கொண்டிருக்கிறது. கடலில் இருந்து வீசும் காற்று ஈரமானதாக இருப்பதால் அவைகள் பெரிய **மேகங்களை** உண்டு பண்ணக் கூடியதாக இருக்கிறது. வேதத்தை எழுதிய எழுத்தாளர்கள் இந்த **மேகங்கள்** மூலமாக ஆவிக்குரிய சில உண்மைகளைக் கொண்டுவர தேவன் அவர்களை ஏவினார். அந்த உண்மைகள் சிலவற்றை இங்கு காண்போம்.

**பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் நாம் பார்க்கும்போது, தேவனுடைய மகிமை, அவருடைய பிரசன்னம் போன்றவற்றை உணர்த்த மேகங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.** கர்த்தர் மோசேயை நோக்கி; ஜனங்கள் உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி **நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன்** என்றார் ( யாத் 19 : 9 ). தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு 10 கட்டளைகளைக் கொடுத்த போது இடிமுழக்கங்களும், மின்னல்களும், மலையின்மேல் **கார்மேகமும்** உண்டாயிற்று. அவருக்கு நாம் மரியாதை செலுத்த எல்லாத் தகுதியும் அவருக்கு உள்ளது என்ற பாடத்தை இதிலிருந்து கற்றுக்கொள்கிறோம்.

**இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்பட்டுச் சென்ற போது தேவன் அவர்களைப் பெரிய மேகத்தை ஸ்தம்ப வடிவில் கொடுத்து அதன் மூலம் வழிநடத்திச் சென்றார்.** இதைப்பற்றி மற்றொரு வேதாகம எழுத்தாளர் கூறும் போது, **நீர் அவர் களை வழிநடத்தப் பகலிலே மேகஸ்தம்பமும், அவர்களுக்கு வெளிச்சத்தையும், அவர்கள் நடக்க வேண்டிய வழியையும் காட்ட இரவிலே அக்கினி ஸ்தம்பமும் அவர் களை விட்டு விலகவில்லை** ( நெகே. 9 : 19 ). இந்த **மேகத்திலிருந்து** நாம் கற்றுக் கொள்ளக்கூடிய பாடம் என்னவென்றால், நம் வாழ்நாள் முழுவதும் தேவன் தான் நமக்கு நம்பகமான வழி காட்டியாக இருக்கிறார் என்பதை மறக்கக்கூடாது.

**தேவன் இந்த மேகத்தை நாம் அவருக்கு கீழ்ப்படியும் போது நம் முடைய பாவங்களை அப்படியே முழுவதும் அகற்றி விடுதலுக்கு ஒப் பாகப் பேசுகிறார்.** ஏசாயா தீர்க்கதரிசி, **உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப் போலவும் அகற்றி விட்டேன் என்கிறார்.** (ஏசாயா 44 : 22). எல்லா ஜனங்களும் நன்மை, தீமை அறியும் வயது வந்த வுடன் தேவனுடைய கட்டளையை மீறுகிறார் கள். தேவனுடைய பிரமாணத்தை மீறினால் அது **பாவம்** (1யோவான் 3 : 4).

**பாலஸ்தீன சேத்திலே விடியற்காலத்திலே மேகம் தோன்றி, கொஞ்சம் கொஞ்சமாக மத்தியானத்திற்குள் காணாமல் போய்விடும் அதுபோலவே தீங்கான காரியங்கள் நம்மை விட்டு கடந்து சென்று விடுகிறது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.** நீதிமானாக மிகப்பெரிய செல்வந்தனாக வாழ்ந்து தேவனை ஆராதித்து வந்த பக்தன் யோபுவை சாத்தான் பல வகைகளிலும் சோதிக்கும்படி தேவன் அனுமதித்து விட்டார். அவனுக்கிருந்த எல்லாம் அவனை விட்டுப் போய்விட்டது. **என் சுகவாழ்வு ஒரு மேகத்தைப் போல் கடந்து போயிற்று** ( யோபு 30 : 15 ) என்கிறான். ஆகவே, பரலோகக் காரியங்களுக்காக நம் வாழ்க்கையை அர்ப்பணித்து நம்மை சிருஷ்டித்தவருக்கு உண்மையானவர்களாக இருப்போம்.

**இந்த மேகங்கள் நம் சிருஷ்டிகரின் அளவுக்கதிகமான, வியக்கத்தக்க வல்லமையை விவரிக்கிறதாயிருக்கிறது.** யோபுவிடம் ஒரு மனிதன், **மேகங்கள் தொங்கும்படி வைக்கும் நிறையையும், பூரண ஞானமுள் ளவரின் அற்புதமான செய்கைகளையும்** (யோபு 37 : 16) என்று கூறுகிறார். அப்படியானல் தண்ணீரை தனக்குள்ளே வைத்திருக்கிற **மேகம்** எப்படி தொங்கிக் கொண்டுள்ளது? முக்கியமான காரணிகளான ஈர்ப்பு விசை, நீர்த்துளிகளின் அளவு, காற்றின் அடர்த்தி போன்றவைகளால் ஒன்றுக் கொன்று சரி நிலையில் வைத்து **மேகங்கள்** தொங்கிக் கொண்டிருக்க உதவி செய்கிறது. இப்படி தேவனுடைய அதிசயங்களைப் பார்க்கும் போது அவைகள் எண்ணிலடங்காதவைகள்!.

ஆம், என் அருமை தம்பி, தங்கைகளே, **மேகங்களை** எடுத்துக் காட் டாக வைத்து வேதத்தின் உண்மைகளைக் கற்றுக் கொண்ட நீங்கள் இந்த உண்மைகளை மறவாமல் உங்கள் வாழ்வில் கடைபிடித்து தேவனுடைய எதிர் பார்ப்பின்படி வருங்காலத்தில் சிறந்த கிறிஸ்தவர்களாக வாழ்ந்து ஜொலிக்க தேவன் கிருபை செய்வாராக. ஆமென்! ●

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழுமுகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். இதற்கான விடை மே மாத இதழில்!**

1. ஆசாரினாகவும்,ராஜாவாகவும் இருந்தது யார்?
2. ஈசாக்கு பிறந்தபோது ஆபிரகாமின் வயது என்ன?
3. சாராளை எங்கே அடக்கம் பண்ணினார்கள்?
4. பெத்துவேலின் மகள் யார்?
5. எந்தத் துரவுக்காக கேராரூர் மேய்ப்பர் வாக்குவாதம் பண்ணவில்லை?
6. யோசேப்பு எந்த வயதில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான்?
7. யார் தனது எலும்புகளை கொண்டு செல்லும்படி ஆணையிட்டது?
8. யேகோவாயீரே என்பதன் அர்த்தம் என்ன?
9. யார் நிமித்தம் எகிப்தியன் வீடு ஆசீர்வதிக்கப்பட்டது?
10. சகல தேசத்தாரும் எதற்காக எகிப்துக்கு வந்தார்கள்?

(ஆதியாகமத்தில் தேடி கண்டுபிடியுங்கள்)

## மார்ச் மாத கேள்விகளுக்கான பதில்கள்

1. 50, அதிகாரங்கள் 1533 வசனங்கள்.
2. பாஷை, பேச்சு ( ஆதி 11 : 1 ).
3. பாபேல் ( ஆதி. 11 : 9 ).
4. தேராகு, நகோர், ஆரான் ( ஆதி. 12 : 26 ).
5. 75 வயது ( ஆதி. 12 : 4 ).
6. சாராயினிமித்தம் ( ஆதி. 12 : 17 ).
7. லோத்து ( ஆதி. 12 : 5 )
8. எலியேசர் ( ஆதி. 15 : 2 ).
9. 400 வருஷம் ( ஆதி. 15 : 13 ).
10. திரளான ஜாதிகளுக்குத் தகப்பன் ( ஆதி.17 : 5 ).

### சரியான பதில் எழுதியவர்கள்

1. சாமுவேல் மோகன்தாஸ் – சென்னை
2. மாலதி ஜெயசெல்வம் – நாகை
3. ஜான்சி – ஆனைமலை
4. நிறைமதி – சென்னை.
5. ஜெமீலா – நெல்லை
6. பாக்கியசம்பூரணம் – ஈரோடு
7. ஜெயமணி ஜெய பாண்டியன் – கடலூர்
8. ஜெயராஜ் ( Tr ) – பொள்ளாச்சி.
9. அருள்ராஜ் – சென்னை
10. ஜரின் லீனா – குண்டூர்
11. ராஜேந்திரன் – கோபி
12. சந்திராள் – கோபி.
13. மெர்ஸி ரூபஸ் – சேலம்.

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி :** சாத்தானின் அற்புதங்கள் உண்மையானவைகளா?

**பதில் :** இல்லை. யாத்திராகமம் 7 மற்றும் 8 ஆம் அதிகாரங்களில் கோல் சர்ப்பமாக மாறுகிற அற்புதம், தண்ணீர் இரத்தமாக மாறுகிற அற்புதம் தவளைகள் வாதை என்று சில அற்புதங்களை நாம் காண்கிறோம். இவைகள் தேவதாசர்களாகிய மோசேயாலும், ஆரோனாலும் செய்யப்பட்டன. ஆனால் இதே அற்புதங்களை எகிப்தின் மந்திரவாதிகளும், சூனியக்காரரும் செய்தார்கள். சில பிரசங்கியார்கள் பிசாசுக்கு சில அற்புத அடையாளங்களைச் செய்யும் வல்லமை உண்டு, ஆனால் அது வஞ்சனையானதென்றும் அது ஒருவருடைய அழிவுக்கு வழிவகுக்கும் என்றும் சொல்கிறார்கள்.

இது குறித்து **Albert Burnes** என்றும் வேதவல்லுநர் வியாக்கியானம் செய்யும்போது எகிப்தின் மந்திரவாதிகள் செய்த அற்புதங்கள் ஒரு பொய்யான நோக்கத்தை ஒரு மாயையைத்தான் ஏற்படுத்தியிருக்கின்றன. ஒரு மாயவித்தைக்காரன் என்ன செய்வானோ அதைத்தான் அந்த மந்திரவாதிகள் செய்திருக்கிறார்கள். உண்மையாகவே அற்புத அடையாளங்கள் செய்யவில்லை என்று சொல்கிறார். ஆனால், எப்படிப்பார்த்தாலும் ஆரோன் செய்த அற்புதம் மற்றவர்களுடைய அற்புத்திலிருந்து வித்தியாசப்படுகிறது. மற்றுமொரு வர்ணனை, மந்திரவாதங்களை அப்படியே செய்துகாட்ட முடியும் அதாவது உண்மையான சர்ப்பங்களை மயங்கச் செய்து அவைகளை கோலைப்போல உறுதியாக்கி பின்பு மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவரமுடியும் என்று சொல்கிறது.

ஆயினும் **Adam Clarke** என்னும் மிகப்பிரபலமான வர்ணனையாளர் **மந்திரவித்தை** என்னும் வார்த்தை **ஏமாற்று அற்புதங்களைத்தான்** குறிக்கிறது என்று சொல்கிறார். ஆனால், பார்வோனின் மந்திரவாதிகள் செய்த அற்புதங்கள் போலியானவைகள் என்னும் வாதத்தை அவர் மறுக்கிறார். மற்றுமொரு வியாக்கியானம் இரண்டு சாத்தியக்கூறுகள் இருப்பதாகச் சொல்கிறது. பார்வோனால் வரவழைக்கப்பட்ட மந்திரவாதிகளும் கோல்களை சர்ப்பங்களாக மாற்றினார்கள் என்று பார்க்கிறோம் இது ஒருவேளை அந்த மந்திரவாதிகள் உண்மையான சர்ப்பங்களை விறைப்பாக்கி கோல்களாகப் போட்டு பின்பு அவைகளை பழைய நிலைக்கு கொண்டுவந்திருக்கலாம் என்னும் சந்தேகத்தையும் எழுப்புகிறது. அதேநேரத்தில் அந்தகார சக்திகள் பொய்யான அற்புதங்களைச் செய்யும் என்பதையும் மறுப்பதற்கில்லை (II தெச 2 : 9).

# நீ அசதியாயிராமல் ஜாக்கிரதையைக் காண்பி!

Bro. பாண்டியன்

**கி**றிஸ்துவுக்குள் அருமையானவர்களே நாம் எதிர்பார்க்கும் தேவ ஆசீர்வாதங்களைப் பெற அசதியாய் இருக்கக்கூடாது என்றும், விசுவாசம், பொறுமை, நம்பிக்கை ஆகிய குணாதிசயங்களில் ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டும் என்றும் எபிரெய நிருப்பத்தில் கூறப்பட்டுள்ளது ( எபி 6 : 11,12 ). இங்கு **அசதி** என்ற வார்த்தை சோம்பலைக்குறிக்கிறது. வேதம் விசுவாசிகளுக்கு கூறும் ஒரு முக்கிய ஆலோசனை ஒவ்வொருவரும் ஒரு நலமான வேலை செய்து, தன் சொந்த சாப்பாட்டைச் சாப்பிடவேண்டும் (2தெச. 3 : 11, 12). நன்கு கவனியுங்கள், **படிப்புக்கேற்ற வேலை** எனக் குறிப்பிடாமல் ஏதாகிலும் ஒரு **நலமான வேலை** என்று அறிவுறுத்தப்படுகிறது. இன்று, கல்வி என்பது மேல்தட்டு மக்களுக்கானது போன்ற மாயை நிலவுகிறது. மேலும் படிப்பு ஒரு விக்கிரகமாக மாறிவருகிறது. தேவனுக்கு செலுத்த வேண்டிய மகிமையை எது எடுத்துக்கொள்கிறதோ அதுவே விக்கிரகமாக உள்ளது. சிலர் படித்த படிப்பைக் காரணம் காண்பித்து எந்த வேலையும் செய்யாமல் இருக்கிறார்கள். அது நல்லதல்ல. ஏனெனில் அப்படிப்பட்டவர்கள் வீண் அலுவற்காரராய் ஒழுங்கற்றுக் திரிகிறார்கள் என்று பவுல் கண்டிக்கிறார். ஆகவே தேவனுடைய பிள்ளைகள் வெறுமனே காலத்தைப் போக்காமல் ஏதாகிலும் பொருத்தமான நலமான வேலை செய்யும்படியாக தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும். இல்லையெனில் பிசாசு தந்திரமாக நம்மைத் தவறான பாதையில் நடத்தி தேவனிடமிருந்து பிரித்துவிடுவான்.

கோணலும் மாறுபாடான சந்ததியை விட்டு உங்களை ரட்சித்துக் கொள்ளுங்கள் என்கிறார் பவுல் அப்போஸ்தலன். **தன் வேலையில் அசதியாய் இருப்பவன் அழிம்பனுக்குச் சகோதரன்** என்கிறான் ஞானி சாலமோன் ( நீதி 18 : 9 ). இங்கு அழிம்பன் என்பது தேவன் தமக்குக் கொடுத்திருக்கிற செல்வத்தை, சோம்பலினால் **அழிப்பவன்** என்று பொருள்படும். நாம் தேவனுடைய குமாரன் இயேசுவுக்கு சகோதரராய் இருக்கிறோம். அவர், தேவன் தமக்குக் கட்டளையிட்டத்தைத் தீவிரமாக நிறைவேற்றினவர். நாமும் நமக்குள்ள வேலையில் ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டும். தன் வேலையில் ஜாக்கிரதையாய் இருப்பவன் – தாழ்ந்து போகாமல் – மேன்மையான இடத்திற்கு வருவான் நீதிமொழிகள் 22 : 29. அசதி அல்லது சோம்பல் என்பது எப்படி நம் வாழ்க்கையைப் பாதிக்கும்

என்று அநேகர் நினைத்துப் பார்ப்பதில்லை. பெற்றோர் ஏதாகிலும் அதைப்பற்றிச் சொன்னாலும் வாலிபப் பிள்ளைகள் பெற்றோர் மீது தான் கோபம் கொள்கிறார்கள். அதற்குத்தான் வேதம் சிறுவயதிலேயே **பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்க்க வேண்டும் என்ற பொறுப்பை வைத்துள்ளது.** நாம் பிள்ளைகளைக் கடிந்துகொள்ளும் போது முடிந்த வரையில் வேதம் இப்படியாகச் சொல்கிறது; நீ மீறி நடக்காதே என்ற ரீதியில் புத்தி சொல்லும் போது அதுபலன் தரும் என்று.

சோம்பலின் ஆபத்தைப்பற்றி வேதம் அருமையாக எச்சரிக்கின்றது. சோம்பல் தூங்கி விழிப்பண்ணும், அசதியானவன் பட்டினியாய் இருப்பான். நீதி 19 : 15. காலை உணவை அநேகர் தவற விடுகிறார்கள். அதுவே பல வியாதிகளுக்கு அடிப்படை காரணம் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். மேலும், தூக்கத்தை விரும்பாதே தரித்திரனாவாய். விழித்திரு அப்போது திருப்தியடைவாய் என்கிறது. நீதி 20 : 13 வெளியிலே சிங்கம், வீதியிலே கொலையுண்பேன் என்று சோம்பேறி சொல்லுவான் என்றும் பார்க்கிறோம். ஆக பொருத்தமில்லாத ஏதோ சாக்கு போக்குகளைச் சொல்லி சோம்பலை சிலர் நியாயப்படுத்துகிறார்கள். தொடர்ந்து **சோம்பேறியின் வயல்** பற்றிய எடுத்துக்காட்டு அது முள்ளுக்காடாய் இருந்தது என்றும், இன்னும் கொஞ்சம் தூங்கட்டும்... உறங்கட்டும் என்றிருந்தால் தரித்திரமும் வறுமையுமே அதன் முடிவாய் காணப்படும் என்றும் எச்சரிக்கப்படுகிறோம் ( நீதி 24 : 30-34 ). நம் தலைப்பு வசனப்பகுதியில் மேலேயே, **தன்மேல் அடிக்கடி மழைபெய்தும் முள்பூண்டுகளை முளைப்பிக்கிற நிலம் சபிக்கப்பட்டது** என்று பார்க்கிறோம். எனக்கன்பானவர்களே, இது நிலத்தைப்பற்றி மட்டுமல்ல நம்மைப்பற்றியும் குறிக்கிறது என்பதை நாம் அறிவோம். சபை கூடி வரும்போதெல்லாம் உபதேசமாகிய மழை, நிலமாகிய நம் இருதயத்தின் மேல் பொழிகிறது. நாம் அதற்கேற்றபடி நடந்து பலன் கொடாவிட்டால் நாமும் சபிக்கப்பட்டவர்களாவோம். அதற்கு அசதியையும் சோம்பலையும் நாம் களைய வேண்டும். **மிகுந்த சோம்பலினால் மேல்மச்சு பழாகும், வீடும் ஒழுகும்** என்கிறான் பிரசங்கி. நம் சரீரம் தேவனுடைய வாசஸ்தலம். அதை அசதியினால் பாழாக்காமல் வேதவாசிப்பு, ஜெபம், சபை கூடுதல் இவைகளில் ஜாக்கிரதை காண்பிப்போமா? அல்லது அசதியாயிருந்து தேவன் நமக்குள் வாசமாயிருக்கும்படி கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தலாமா? அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள், ஆவியில் அனலாயிருங்கள், கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள் என்ற பவுலின் வார்த்தையை நினைவுகூருவோம். (ரோமர் 12 : 11).

நமதாண்டவர் இயேசுவானவர் தாலந்து பற்றிய உவமையில், ஒரு தாலந்தை உபயோகப்படுத்தாமல் திருப்பிக் கொடுத்தவனை அவன் எஜமான் **பொல்லாதவனும் சோம்பலுமான ஊழியக்காரனே** என்று கடிந்து கொண்டான். இரட்சிக்கப்பட்டு சபையில் இருக்கும் நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய பணியில் நம்மால் முடிந்ததைச் செய்து சபையாருக்கும், ஊழியருக்கும் எவ்விதத்தில் உதவியாய் இருக்கமுடியும் என்று சிந்தித்து, ஜெபித்து தேவனுக்குப் பிரியமாயிருக்க நாடவேண்டும். சபை கூடுமிடத்தை ஆராதனைக்கு ஆயத்தம் செய்வதும் கூட ஒரு ஒத்தாசையே. ஆகவே, தேவ ஆசீர்வாதங்களைப் பெற நாம் அசதியாய் இராமல் ஜாக்கிரதையாய் இருப்போமாக. ஜாக்கிரதை என்ற வார்த்தை சுறுசுறுப்பு அல்லது விழிப்பாயிருப்பதைக் குறிக்கிறது. சோம்பேறியுடைய ஆத்துமாவோ விரும்பியும் ஒன்றும் பெறாது. ஜாக்கிரதை உள்ளவர்களுடைய ஆத்துமா புஷ்டியாகும். நீதி 13 : 4. ஆவிக்குரிய விஷயத்தில் நம் ஆத்துமா செழிப் பாயிருக்க, நாம் தேவனுடைய வசனங்களை ஆவலாய் (ஜாக்கிரதையாய்) கவனிக்க வேண்டும்; கவனித்ததை வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும். சங்கீதக்காரன் பாடியபடியே கர்த்தருடைய வேதத்தில் பிரியமா யிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷனே பாக்கிவானாயிருப்பான். அப்படிப்பட்டவனே இலையுதிராமல், தன் காலத்தில் தன் கனியைத்தரும் மரத்தைப்போல் செழிப்பாயிருப்பான் .

நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண் ணுங்கள். ஆவி உற்சாகம் உள்ளது தான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார் நமதாண்டவர். ஆக நம் ஆத்துமா செழிப்பாக விடாமல் நமது மாம்சமே நமக்குத் தடையாக இருக்கிறது. அதற்கு ஜெபம், வேதவாசிப்பு, விட்டுவிடாத சபை கூடுதல் இம்மூன்றும் இன்றியமையாதவை. இதில் ஒன்று குறைந்தாலும் உன் மாம்சம் உனக்கு போதகராக மாறி கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை போன்ற உலக வழியில் உன்னை இழுத்து விட்டுவிடும். அதையே பவுல் – மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கு மற்றொன்று விரோதமாகப் போராடி நம்மைத் தடுமாற வைக்கிறது என்கிறார் (கலாத் 5 : 17). மேலும் பேதுரு இதைப்பற்றி எழுதும் போது, **உங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக் கும்படி ஜாக்கிரதையாய் இருங்கள். இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக் காலும் இடறி விழுவதில்லை** (2 பேது 1 : 10) என்கிறார். என்னதான் நாம் பிர யாணத்திற்கான பயணச்சீட்டை முன்பதிவு செய்திருந்தாலும், அது உறுதி ஆக வேண்டும் என்று எதிர்பார்ப்பது போல, இரட்சிக்கப்பட்டு சபையில் இருந்தாலும் அதை உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டியது

அவசியம் என்கிறார். அதுமாத்திரமல்ல, சபை வாழ்க்கையின் முடிவைப் பற்றி எழுதும் போது, கிறிஸ்துவின் வருகைக்கு நாம் எதிர்பார்த்து வாழ வேண்டும் என்றும் அதற்கு நாம் இவ்வுலகில் கறையற்றவர்களும், பிழை யற்றவர்களுமாய் வாழ்ந்து அவர் சந்நிதியில் சமாதனத்தோடே காணப்பட ஜாக்கிரதையாய் இருங்கள் என்றும் வலியுறுத்துகிறார். (2 பேது 3 : 14)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! நம்மில் அநேகர் சோம்பலின் ஆபத்தை உணராமலே இருக்கிறோம். நாம் அசதியாய் இருப்போமானால் நம் ஆத்துமா புஷ்டியடையாது. நாம் அழைக்கப்பட்டவர்கள், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து, கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்தவர்களாகவும், உலகத்தால் கறைபடாமல் ஜாக்கிரதையாய் வாழ்ந்து கிறிஸ்தவ ஓட்டத்தை முடிக்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். அதற்கு அவசியமாக நம் முன்னோர்களிடமிருந்து நாம் விசுவாசதையும், நீடிய பொறுமையையும் பின்பற்ற வேண்டியே பரிசுத்த வேதம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே நம்முடைய நம்பிக்கையின் உறுதியையும், நிச்சயத்தையும் அடைய முடிவுபரியந்தமும் நம் ஜாக்கிரதையைக் காண்பிப்போமாக. தேவக்கிருபையும், கிறிஸ்துவின் சமாதானமும் நம் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்!

## வேதம் காட்டும் மனிதனின் மனது

- கேடான மனது (மத்தேயு 5 : 27 , 28).
- மேட்டிமையான மனது (ரோமர் 12 : 16).
- சந்தேகிக்கும் மனது (லூக்கா 24 : 38).
- கவலையுள்ள மனது (லூக்கா 12 : 29).
- சுயநலமான மனது (லூக்கா 12 : 17 – 21).

# ஆண்டவரே
# நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்

Bro. ஹென்றி மோகன்

**ஆ**ண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறியாத சவுல் என்ற மனிதனை இயேசு சந்தித்து அவனைப் பெயர் சொல்லி அழைத்தபோது அவன் முதலாவது தன்னை அழைத்தவரைப் பற்றி அறிந்து கொள்ள முற்பட்டு, **ஆண்டவரே நீர் யார் என்றான். அதற்குக் கர்த்தர் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்றார்.** சவுல் அவரை இயேசு என்று அறிந்தவுடன் ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான் ( அப் - 9 : 4-6 ). சவுலுக்கு தேவனுடைய சித்தம் அறிவிக்கப்பட்டதும் உடனே அதற்குக் கீழ்ப்படிந்தான்.

சவுலைப் போல இயேசுவை அறிந்துகொண்ட அநேகர் தாங்கள் என்ன செய்ய கர்த்தர் சித்தமாயிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளாமல் இயேசுவைப்பற்றி தங்களுக்கு அறிவித்தவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுகிறவர்களாக அவர்களுடைய ஆலோசனைகளின்படி நடந்து தேவனுடைய சித்தத்தை அறிந்துக்கொள்ளாமலே தாங்களும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றியதாக எண்ணிக்கொண்டு தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொண்டிருப்பது மிகவும் வருத்தம் அளிக்கக்கூடிய ஒன்று.

எனவே, தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய முக்கியமான செய்தி என்னவென்றால்: கர்த்தர் பெரியவர், நம்முடைய ஆண்டவர் எல்லா தேவர்களுக்கும் மேலானவர், வானத்திலும் பூமியிலும் சமுத்திரங்களிலும் எல்லா ஆழங்களிலும் கர்த்தர் தமக்குச் சித்தமானதையெல்லாம் செய்கிறார் ( சங் - 135 : 5-6 ). ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாக இராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள் (எபே - 5 : 17).

ஆதியிலே தேவன் வானங்களையும், பூமியையும் அவைகளிலுள்ள சகலத்தையும் உண்டாக்கினபோது அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? (ஏசா - 40 : 13 , ரோ - 11 : 33 - 35). அவர் சகலத்தையும் தம்முடைய திட்டத்தின்படியே செய்தார். பின்பு தேவன் மனுஷனை

உண்டாக்கின போது அவருடைய சித்தத்தின்படியே அவனை மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் அன்பிலும் தேவனுடைய சாயலாக அவருடைய மகிமைக்கென்று சிருஷ்டித்தார் (எபே – 4 : 24, ஏசா – 43 : 7).

ஆனால் கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரை கண்நோக்கிப் பார்த்தப்போது எல்லோரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள் (சங் 14 : 2–3 ). அந்தபடியே, நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை; தேவனை தேடுகிறவன் இல்லை; எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையை இழந்தவர்களாக இருப்பதை கர்த்தர் கண்டார் (ரோமர் 3 : 10 , 11, 23).

**இழந்தநிலையில் மனிதனைக்குறித்து தேவனுடைய சித்தம் என்ன?**

பாவிகளை இரட்சித்து, இழந்துபோன தேவ மகிமையை மனிதன் அடையும் பொருட்டாக தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை பாவ நிவாரண பலியாக சிலுவையில் ஒப்புக்கொடுக்க சித்த மானார். இயேசு கிறிஸ்துவும் பாவம் செய்தவர்களாகிய நாம் படவேண்டிய பாடுகளை அவர் ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை அவர் சுமந்து, நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டு, நமக்கு சமாதானத்தை உண்டுபண்ண ஆக்கினையை அவர் ஏற்றுக்கொண்ட படியால் நமக்கு பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பின் திட்டத்தை தேவன் ஏற்படுத்தினார் (ஏசா – 53 : 4 – 6).

இந்த நற்செய்தியை எல்லா மனுஷருக்கும் பிரசங்கியுங்கள் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கப்படுவான் என்றார் இயேசு (மாற் – 16 : 15–16).

இயேசு கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப் பட்டு உயிர்த்தெழுந்தார் என்ற நற்செய்தியை விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் இரட்சிக்கப்படவும் தேவமகிமையை அடையவும் தேவன் சித்தமானார். தேவனுடைய சித்தத்தை அறிந்து கொண்டவர்கள் அநேகர் ஞானஸ்நானம் பெறுகிறார்கள், ஞானஸ்நானம் பெறவும் முன்வருகி றார்கள். ஆனால் தேவன் எல்லாவற்றையும் தம்முடைய சித்தத்தின்படி செய்கிறவரானபடியால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்களும் பெற வேண்டும் என்று முன்வருபவர்களும் ஞானஸ்நானத்தைக் குறித்து தேவ னுடைய சித்தம் என்ன என்பதை அறிந்து ஞானஸ்நானம் பெறுவது அவசியமல்லவா. தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளாமல் சுயசித்தத்தின்படி ஞானஸ்நானம் பெற்று தேவசித்தத்தை அவமாக்கி

நம்மை நாமே வஞ்சிக்கலாமா? கூடாதே.

ஞானஸ்நானத்தைக் குறித்து தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளுங்கள். முதல் நூற்றாண்டில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள் என்பதை ரோமர் 6 : 3–ல் பவுல் நினைவுபடுத்தி எழுதுகிறார். அப்படியானால் ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் எல்லோருமே கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பது தான் தேவனுடைய திட்டம். ஏனென்றால் பாவமன்னிப் பாகிய மீட்பு இயேசுகிறிஸ்துவுக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது (எபே – 1: 7). அதாவது கிறிஸ்துவின் சரீரத்திற்குள் பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண் டாயிருக்கிறது என்று பவுல் எழுதுகிறார். பவுல் மேலும் கொரிந்தியர் 1 : 14–ல் குமாரனாகிய அவருக்குள் அதாவது அவருடைய சரீரத்திற்குள் பாவ மன் னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது என்றும் அவருடைய சரீரம் என் பது அவருடைய சபை என்று பவுல் எழுதுகிறார் (கொ – 1: 24). மேலும் அந்த சபைக்கு பவுல் ஊழியக்காரனானேன் என்றும் எழுதிகிறார் (கொ – 1: 26).

மேலும் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயா தீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக (ஒரே சபைக்குள்ளாக ) ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம் என்று பவுல் எழுது கிறார் (1 கொ – 12 : 13). மேலும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக (அவருடைய சரீரமாகிய சபைக்குள்ளாக) ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவை தரித்துக்கொண்டீர்களே என்றும் யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீன னென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் அதாவது அவருடைய சரீரமாகிய சபைக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் (கலா – 3 : 27,28) என்றும் எழுதுகிறார்.

மேற்கண்ட வசனங்களைத் தியானிக்கும்போது எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் (அவருடைய சரீரமாகிய ஒரே சபைக்குள்) ஞானஸ்நானம் பண்ணப்பட்டு கிறிஸ்துவின் சபையில் ஒன்றாயிருக்க வேண்டும் என்பதே தேவ சித்தம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் இதற்காகவே வேண்டுதல் செய்தார். இயேசு: நான் இவர்களுக்காக ( சீஷர்களுக்காக ) வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் (நமக்காகவும்) வேண்டிக்கொள் ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில்

ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன் என்று வேண்டுதல் செய்தார் (யோ – 17 : 20,21).

கிறிஸ்து என் சபையை கட்டுவேன் என்றார் ( மத் – 16 : 18 ). அந்த சபைக்கு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள் என்பவர்கள் அஸ்திபாரமாயிருக்கிறார்கள். கிறிஸ்துவின் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாக கூட்டி சேர்க்கப்படவும் எல்லாரும் ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம் (எபே – 2 : 19–22). எனவே, நீங்களும் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து தேவனுக்கு மகிமையை உண்டாக்க விரும்புவீர்களானால் தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பார்.

## நாளும் நடப்பும்

- குறைந்த விலையில் தரமான மருத்துவ சிகிச்சை – மத்திய அரசு.
- ஆதார் எண்ணை இணைத்தால் தான் மின்னனு குடும்ப அட்டை – ஜுன் மாதம் வரை அவகாசம்.
- கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் 100 டிகிரிக்கும் அதிகமான வெப்பம் பதிவாகியுள்ளது – வானிலை ஆய்வு மையம்
- தமிழகத்தில் குடிநீர் தட்டுப்பாடு வெகுவாக நிலவி வருவதால் மக்கள் கடும் அவதி.
- முதல் தகவல் அறிக்கையை வழக்காகக் கருதி கடவுச் சீட்டில் மாற்றம் செய்ய மறுப்பது தவறு – உயர் நீதிமன்றம்.
- 10 வது ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.